Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 87/2025**

**வழக்கு சாட்சி எண். PW1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கார்மேகம் | கிராமம் | : | மாரப்பநாயக்கன்பட்டி |
| தந்தை பெயர் | : | சுப்பிரமணி | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 40 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் பா.நி.சு.சா. பிரிவு - 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21**th** Day of **May 2026.**

**முதல் விசாரணை**

நான் தற்போது மொரப்பூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 03.11.2024ம் தேதி காலை 10 மணிளவில் நான் பணியில் இருந்தபோது காவல் உதவி ஆய்வாளர் நந்தினி அவரது தலைமையில் நானும் முதல்நிலை காவலர் கார்த்திகேயன் ஆகியோரும் மது விலக்கு குற்ற தடுப்பு சம்பந்தமாக மொரப்பூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியான சிந்தல்பாடி கிராமத்தில் கண்காணித்து கொண்டு இருந்த போது எதிரி பழனிசாமி அவரது வீட்டின் பின்புறம் ஒரு பை வைத்துக்கொண்டு சந்தேகப்படும்படி நின்றிருந்தார். அவரை சந்தேகத்தின் பேரில்

தடுத்து நிறுத்திய போது தப்பி ஓட முற்பட்டார் அவரை பிடித்து சோதனை செய்த போது **பையில் 180ml old chef பிராண்டி பாட்டில் -26** இருந்தது எதிரியிடம் கேட்ட போது எதிரி அரசு மது பான கடையில் வாங்கி பொது மக்களுக்கு அதிக விலைக்கு சில்லரை விற்பனை செய்வதற்காக வைத்திருப்பதாக கூறினார். காவல் உதவி ஆய்வாளர் எதிரியை அந்த இடத்திலேயே கைது செய்து தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் எங்கள் முன்னிலையில் எதிரியிடம் இருந்து **பையில் 180ml old chef பிராண்டி பாட்டில் -26** கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார். அந்த இடத்திலேயே கொட்டி அழித்து கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழித்தல் மகசர் தயார் செய்தார். அந்த கைப்பற்றுதல் மகசரில் நானும் முதல்நிலை காவலர் கார்த்திகேயன் ஆகியோரும் கையொப்பம் இட்டோம்.

இன்று என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். **கைப்பற்றுதல் மகசர் உடன் இணைந்த அழித்தல் மகசர் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுகிறது.**

கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை காவல் உதவி ஆய்வாளர் அந்த இடத்திலேயே கொட்டி அழித்தார் மேலும் எதிரியுடன் நிலையம் வந்தடைந்து காவல் உதவி ஆய்வாளர் எதிரி மீது வழக்கு பதிவு செய்தார்.

வழக்கு தொடர்பாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு சம்பவம் எதிரியின் வீட்டில்தான் நடந்தது. சம்பவம் நடந்த இடத்திற்கு அருகே பக்கத்து வீட்டார் இருந்தார்கள். அந்த நபர்களை காவல் உதவி ஆய்வாளர்

விசாரணை செய்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரியை கைதுசெய்துவிட்டு காவல் நிலையம் வந்துவிட்டோம் அதன் பின்பு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழித்தல் மகசரை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தோம் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து எங்களை விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். சம்பவயிடத்தில் இருந்த 26 பாட்டில்களை காவல் நிலையத்திற்கு கொண்டுவந்தோம். கைப்பற்றுதல் மகசர் மற்றும் படிவம் 91 ஆகியவற்றை காவல் நிலையத்தில் தயார் செய்து கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். மதுபாட்டில்களை யாருக்கு விற்பனை செய்தார் என்றால் எனக்கு தெரியாது. நான் சொன்னவாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் உயர் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**